### அரியலூர் மாவட்டத்தில்

# ரூ.3 கோடியில் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி அரங்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலியில் திறந்து வைத்தார்! அமைச்சர் சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர், பிப், 18 - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளிக்காட்சி வாயிலாக தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை சார்பில் அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், கீழப்பழுவூர் ஊராட்சியில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள மொழிப்போராட்டத் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி அரங்கத்தினை திறந்து வைத்தார் .

கீழப்பழுவூர் ஊராட்சி, மொழிப்போராட்டத் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி அரங்கத்தில் நடைபெற்ற இவ்விழாவின் காணொளிக் காட்சி நேரலை ஒளி பரப்பு நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் கலந்துகொண்டார். அதனைத்தொடர்ந்து புதிதாக கட்டப்பட்டுள்ள அரங்கத்தில் துவக்கி வைத்து, அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி அரங்கினைப் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், மாவட்ட வருவாய் அலுவலர் க. ரா.மல்லிகா ஆகியோர் கலந்துகொண்டனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் திருவுருவச்சிலை, சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர்.ப.சுப்பராயன் அவர்களின் அரங்கம் மற்றும் திருவுருவச்சிலை, மொழிப்போராட்டத் தியாகி கீழப்பழுவூர் ஆ.சின்னசாமி அவர்களின் அரங்கம், காவிரி மீட்புக்குழுவில் போராடியவரும், விவசாயிகளின் நலனுக்காகப் பாடுப்பட்டவருமான சி.முத்துசாமி அவர்களின் திருவுரு வச்சிலை ஆகியவற்றை காணொளிக்காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

**சட்டப் பேரவையில் அறிவித்தது நிறைவேற்றம்!**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, 10.04.2023 அன்று நடைபெற்ற சட்டமன்றப் பேரவை கூட்டத்தொடரில் 2023-2024ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மானியக் கோரிக்கையின் போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் தமிழ் மொழி மீது தீராத பற்றுக் கொண்டு, இந்தி திணிப்பினை எதிர்த்துப் போராடி முதன் முதலில் உயிர்த் தியாகம் செய்த கீழப்பழுவூர் சின்னசாமி அவர்களுக்கு அரியலூர் மாவட்டத்தில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் அரங்கம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில் கீழப்பழுவூர் ஊராட்சியில் பரப்பு 0.44.5 (1.10 ஏக்கர்) ஏர்ஸ் அளவிலான இடத்தில் அரங்கம் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டு, சுமார் 500 நபர்கள் அமரும் வகையிலான அரங்கம், உணவுக்கூடம் அமைக்கும் பணிகள் முடிவுற்றதைத் தொடர்ந்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அரியலூர் மாவட்டத்திற்கு மேலும் ஒரு அடையாளமாக பெருமை சேர்க்கும் வகையில் மொழிப்போராட்டத் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி அரங்கம் திறந்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அரங்கத்தில் பார்வையிட்டார்.

மொழிப்போராட்டத் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி அவர்களின் அரங்கத்தினை பார்வையிட்ட பின்னர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ் மொழிக்காக தனது இன்னுயிரை ஈந்து தமிழை காத்து இந்தி திணிப்பு தமிழ்நாட்டின் மீது ஏவப்பட்ட நேரத்தில் தன்னை முதல் களப்பலியாக கொடுத்து இந்தி எதிர்ப்பு போரில் தமிழ்நாட்டில் தீவிரப்படுத்தி இன்றைக்கு நாம் அனைவரும் தமிழ்மொழி பேசுவதற்கு, தமிழ் மொழி காக்கப்பட்டதற்கு காரணமாக இருந்த அய்யா கீழப்ப பழுவூர் சின்னசாமி அவர்களுக்கு அரங்கம் அவரது சொந்த ஊரான கீழப்பழு வூரில் கட்டப்பட்டு இன்று திறக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அவர் இன்னுயிரை ஈந்த திருச்சி மாநகரில் அவரது திருவுருவச்சிலை நிறுவப்பட்டிருந்தாலும் அவருடைய சொந்த ஊரில் இந்தப் பகுதி மக்களுக்கு அவரது நினைவை என்றும் போற்றும் வகையில் நினைவு அரங்கம் அமைக்கப்பட வேண்டும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முடிவு செய்து அதற்காக ரூபாய் 3 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, சிறப்பான அரங்கம் அமைக்கப்பட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**மக்கள் பயன்படுத்தக்கூடிய அரங்கம்!**

இந்த அரங்கமானது பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட இருக்கிறது. அவருடைய பெயர் தாங்கி காலந்தோறும் இருக்கப் போகின்ற இந்த அரங்கம் பொதுமக்களுக்கு பயன்படுகின்ற வகையில் அமைக்கப்பட்டதுதான் இதன் சிறப்பாகும். வேறு அரங்கமாக நினைவு நாளுக்கு மட்டும் வந்துசெல்லும் இடமாக இல்லாமல் மக்கள் பயன்படுத்தக் கூடிய அரங்கமாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி அமைக்கப்பட்டுள்ளது. அதற்காக கீழப்பழுவூர் அமைந்துள்ள அரியலூர் மாவட்ட பொதுமக்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். தமிழ்மொழி மீது தொடுக்கப்படுகின்ற தாக்குதல், மும்மொழி திட்டம் என இந்தியை திணிக்க எடுக்கப்படுகின்ற முயற்சிகளுக்கு தமிழ்நாடு என்றைக்கும் பலியாகாது. அதற்கு அடையாளம் என்றால் அய்யா கீழப்பழுவூர் சின்னசாமி அவர்கள் தான். ஒவ்வொரு வருடமும் மொழிப்போர் தியாகிகள் தினம் என்பது அவர் தனது இன்னுயிரை ஈந்த தினத்தில் கொண்டாடப்படுகிறது.

**மொழிக்காக உயிர் நீத்தவர்களின் புகழைப் போற்றும் அரசு!**

அதே வகையில் இன்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், அய்யா கீழப்பழுவூர் சின்னசாமி அவர்களின் புகழுக்கு மகுடம் சூட்டும் வகையில் இந்த மண்ணிலே இந்த அரங்கத்தினை அமைத்து கொடுத்துள்ளார்கள். மிகச் சிறப்பான முறையில் அரங்கம் அமைத்திருக்கிறது.

மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மொழிப்போர் தியாகிகளின் குடும்பங்களுக்கு நிதியுதவி, மற்றும் இருக்கின்ற தியாகிகளுக்கு ஓய்வூதியம் உள்ளிட்டவற்றை ஏற்படுத்தி கொடுத்தார்கள். அந்தவகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மொழிப்போர் தியாகிகளின் நினைவை போற்றுக்கின்ற வகையில் கடந்த வீரவணக்க நாளன்று இந்தி மொழிப்போராட்டத்தில் உயிர் நீத்த தாளமுத்து நடராசன் அவர்களுக்கு சென்னை மாநகரில் மார்பளவு சிலை அமைத்துள்ளார்கள். அச்சிலை திறந்து வைக்கப்பட்டுள்ள அரசு கட்டடம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காலத்தில் கட்டப்பட்டு அவரது பெயர் அதற்கு சூட்டப்பட்டு உள்ளது. அதேபோன்று ஒவ்வொரு இடத்திலும் உள்ள மொழிப்போர் தியாகிகளின் நினைவிடங்களை எல்லாம் முதலமைச்சர் அவர்கள் சீரமைத்து வருகிறார்கள். என்றைக்கும் மொழிக்காக உயிர் நீத்தவர்களுடைய புகழை உயர்த்திபிடிக்கின்ற வகையில் அவர்களுடைய சந்ததியினருக்கு துணை நிற்கின்ற வகையில் அரசாக முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பிரேமி, பொதுப் பணித்துறை செயற்பொறியாளர் வெங்கடேசன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் போ.சுருளி பிரபு, பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் பாபு, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) சீ.ஶ்ரீராம், வட்டாட்சியர் முத்து லெட்சுமி, மொழிப்போராட்டத் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி அவர்களின் துணைவியார் திருமதி. கமலம், மகள் திருமதி. திராவிடச்செல்வி, கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா. சந்திரசேகர், மாவட்ட துணை செயலாளர் லதா பாலு, விசிக மாவட்ட செயலாளர் அங்கனூர் சிவா, ஒன்றிய பொறுப்பாளர்கள் இரா.கென்னடி, மா.அன்பழகன், கோ.அறிவழகன், ரெ.அசோகசகசக்ரவர்தி, வி.எழில்மாறன், தெய்வ. இளையராஜா, தனவேன் , ஏ.ஜி.எஸ். அருண், நகர செயலாளர் இரா.முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், தலைமை கழக பேச்சாளர் பழ.புணிதம் மற்றும் குடும்பத்தினர், இதர அரசு அலுவலர்கள், மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

### உலக நாடுகளின் கவனத்தை

# தமிழ்நாடு சுற்றுலாத் துறை ஈர்த்து பெரும் சாதனை!

## ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ பாராட்டு!


MERCHANTS OF MAD
PRIVATE PUSH FOR TOURISM IN TN
EYE ON THE SKY

சென்னை, பிப். 18- சுற்றுலாத்துறையை மேம்படுத்த தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் திட்டங்களை பாராட்டி தி டைம்ஸ் ஆஃப் இந்தியா சிறப்புக் கட்டுரை வெளியிட்டுள்ளது.

PRIVATE PUSH FOR TOURISM IN TN எனும் தலைப்பில் தி டைம்ஸ் ஆஃப் இந்தியா வெளியிட்டுள்ள கட்டுரையில்,

சுற்றுலாப் பயணிகளை தமிழ்நாடு அதிக அளவில் ஈர்த்து வருவதாகவும், இத்துறையை விரிவுபடுத்த அரசு மற்றும் தனியார் கூட்டு முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையில், மாநில அரசு அண்மையில் தனியார் நிறுவனங்களு டன் 22 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பில் 127 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளதும், பொழுதுபோக்கு பூங்காக்கள், சாகச சுற்றுலா, விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு, சொகுசு விடுதிகள் ரிசார்ட்டுகளில் இந்த முதலீடுகள் செய்யப்பட உள்ளதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தூத்துக்குடியில்மின்வாகனங்களை உற்பத்தி செய்யும் Vin group, தமிழ்நாட்டில் பல இடங்களில் பொழுதுபோக்கு பூங்காக்கள் மற்றும் ரிசார்ட்டுகளை அமைப்பதற்காக ஆய்வு செய்து வருவதால், தமிழ்நாடு சுற்றுலாத்துறை உலகநாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளதாகவும், இக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியமும், தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகமும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகள் மூலம் மாமல்லபுரத்தில் கடந்த வாரம் திறக்கப்பட்ட க்ளோ கார்டன் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள முட்டுக்காட்டில் திறக்கப்பட்ட மிதக்கும் உணவகம் ஆகியவை இத்திட்டத்தின் சிறப்பான உதாரணங்கள் என்றும் இக்கட்டுரை பாராட்டி உள்ளது.

தனியார் ஒத்துழைப்புடன் ஏலகிரி, ஜவ்வாது மற்றும் கொல்லி மலை உள்ளிட்ட இடங்களில் சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதற்கான டெண்டர் கோரும் நடவடிக்கைகள் மற்றும் பொதுப்பணித் துறையின் பராமரிப்பில் உள்ள சுமார் 6 பாரம்பரிய கட்டிடங்களை அடையாளம் கண்டு, அவற்றை பாரம்பரிய ஹோட்டல்களாக மாற்றுவதற்கான திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டி உள்ள இக்கட்டுரை, கடந்த 2024ம் ஆண்டு 30 கோடியே 80 லட்சம் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்துள்ள தமிழ்நாடு, வரும் ஆண்டுகளில் மேலும் சிறப்பான சாதனைகளை படைக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

---

# அதுதான்!

**சி**ங்கத்து
நடையாக

சீரிளமைத்
தமிழாக

போரேந்தும்
வாளாக

பொங்கு
தமிழர்
வாழ்வாக

முத்தமிழின்
வித்தாக

மூவேந்தர்
கெத்தாக

கன்னித்தமிழ்
பூமிக்கு

காலம் நல்கிய
கம்பீரச் சொத்தாக..

உச்சரிக்கும் போதே

எளிய
மக்களுக்கு

உமிழ் நீரும்
இனிக்கிறது

அதுவே

எதிரிகளின்
உறக்கத்தைக்
கெடுத்து

உதறலைக்
கொடுக்கிறது
என்றால்

அது தான்..

முத்துவேல்
கருணாநிதி
ஸ்டாலின்

**என்ன நாஞ் சொல்றது..**





**மருது. அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக்குழு துணைத் தலைவர்

---

### சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# தொகுதி வாரியாக வெல்லும் தமிழ் பெண்கள் பயிற்சி பாசறைக் கூட்டம்!



## மாவட்ட கழக செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிக்கை!

தமிழ்நாட்டுப் பெண்களை உலகளவில் ‘வெல்லும் தமிழ்ப் பெண்களாக’ மாற்றியுள்ள கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, சேலம் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட எடப்பாடி, மேட்டூர், சங்ககிரி ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளிலும், திராவிட மாடல் 2.0 கழக ஆட்சி அமைந்திடும் வகையில், வெல்லும் தமிழ்ப் பெண்கள் வீடு வீடாக மகளிர் பரப்புரை மேற்கொள்ள பயிற்சி பாசறை கூட்டம் சேலம் மேற்கு மாவட்ட கழக செயலாளர், சேலம் நாடாளு மன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி தலைமையில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல்படி நடைபெற உள்ளது.

| தொகுதி | தேதி / நேரம் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| எடப்பாடி தொகுதி | 18.02.2026 புதன்கிழமை | காலை 9.00 | ஸ்ரீ கிருஷ்ண மஹால், சித்தூர் |
| மேட்டூர் தொகுதி | 18.02.2026 புதன்கிழமை | மதியம் 02.30 | J.K.B. மஹால் கருமலைகூடல் |
| சங்ககிரி தொகுதி | 19.02.2026 வியாழக்கிழமை | காலை 9.00 | R.K.S. மஹால், குப்பனூர் சங்ககிரி |

அதுசமயம் தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அந்நதந்த தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், ஒவ்வொரு வாக்குச் சாவடிகளிலும் நியமிக்கப்பட்டுள்ள பாக மகளிர் பொறுப்பாளர் ஒருவர் வீதம் அனைத்து வாக்கு சாவடிகளிலும் இருந்தும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**டி.எம்.செல்வகணபதி எம்.பி.**
செயலாளர்,
சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.

---

### தி.மு.க. நெசவாளர் அணி

# மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

## நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிவிப்பு!

தி.மு.க. நெசவாளர் அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் நாளை (19.2.2026 வியாழக்கிழமை) காலை 10.30 மணி அளவில் ஈரோடு தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் எனது (நன்னியூர் இராஜேந்திரன்) தலைமையில், நெசவாளர் அணி துணைத் தலைவர் பள்ளிப்பட்டு ஓ.எ.நாகலிங்கம் வரவேற்புரையாற்றிட, - செயலாளர்கள் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், அருப்புக்கோட்டை க.பழனிசாமி, காஞ்சிபுரம் தி.அன்பழகன், பரணி கே.மணி, நெல்லை சொ.பெருமாள், பொள்ளாச்சி கே.எம்.நாகராஜன், சிந்து ரவிச்சந்திரன் - துணைச் செயலாளர்கள் வசந்தம் ஜெயக்குமார், கோபி மணிமாறன், திருச்சி கோவிந்தசாமி, பவானி கே.சரவணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாநில நெசவாளர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :

1. தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா;
2. சட்டப்பேரவைத் தேர்தலில் நமது அணியின் கோரிக்கைகள்
3. 2026 சட்டப்பேரவைத் தேர்தல் பணிகள்
4. கழக ஆக்கப் பணிகள்


**நன்னியூர் இராஜேந்திரன்**
தலைவர்
தி.மு.க. நெசவாளர் அணி

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18
நாள்- 16.02.2026

---

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மாங்குடி மதியழகன்
### பிப்ரவரி 18 (1974)



கழகம் துவங்கப்பட்ட போதே உறுப்பினராகியதுடன், 1950களில் அயல்நாடான பர்மாவில் கழகத்தை வளர்த்தவர்களில் இவரும் ஒருவர்.

தமிழகம் திரும்பிய பின்னர், 1960களில் இராமநாதபுரம் மாவட்ட துணைச் செயலாளராகவும் – முதுகுளத்தூர் வட்டச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.

முதுகுளத்தூர் ஒன்றிய பெருந்தலைவராகவும் – மாநில பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு உறுப்பினராகவும், முதுகுளத்தூர் நிலவள வங்கி தலைவராகவும், ஆனையூர் கூட்டுறவு வங்கி தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, சட்டநகல் எரிப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு மதுரை மத்திய சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**